தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.maveerarnaal.ch / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2020

**8 வயதுப்பிரிவு**
(01.01.2012 – 31.12.2012 வரையில் பிறந்தோர்)

## தமிழீழம் எங்கள் தாய்நாடு

தொன்மைச் சிறப்பும் வீரமும் கல்வியும் செல்வமும் பண்பாடும் மேலோங்க வாழ்ந்த தமிழினத்தின் தாய்நாடு தமிழீழம். எங்கள் தாய்நாட்டைத் தமிழ் மன்னர்கள் பலர் சிறப்பாக ஆட்சி செய்தார்கள். அவர்களுக்குப் பின்னர் அடிமைப்பட்டு அவலப்பட்ட எம் நாட்டையும் எம்மினத்தையும் தலைவர் மாமா தலைநிமிரச் செய்தார். பல்லாயிரம் போராளிகளும் மாவீரர்களும் அவருக்குத் தோள்கொடுத்துத் துணை நின்றார்கள். தமிழ் மக்களின் ஒருமித்த வலிமையுடன் எங்கள் தமிழீழ நிழல் அரசு தன்னிறைவு பெற்று விளங்கியது.

தமிழீழத்தின் தேசிய சின்னங்களாகத் தேசியக்கொடி, காந்தள் மலர், வாகை மரம், செண்பகப் பறவை, சிறுத்தை விலங்கு ஆகியவை விளங்குகின்றன. எல்லைகளை வரையறுத்துப் பாதுகாக்கின்ற தரைப்படை, கடற்படை, வான்படை, கரும்புலிப்படை என தமிழீழ இராணுவப்படையுடன் நிமிர்ந்து நின்றது எங்கள் தாய்நாடு.

இன்று எங்கள் தாய்நாடு எம்மிடமிருந்து பறிக்கப்பட்டிருக்கிறது. போரின் வடுக்கள் தாங்கித் துயருற்றுக் கிடக்கிறது. வளங்கள் நாளுக்குநாள் களவாடப்படுகின்றன. இவற்றைத் தடுக்க வேண்டுமாயின் எங்கள் தாய்நாட்டை நாங்கள் மீட்க வேண்டும். எனவே, இளையோராகிய நாங்கள் எமது தாய்நாட்டை மீட்டெடுக்க ஒன்றுபட்டுப் பாடுபடுவோம் என உறுதி கொள்வோமாக!

நன்றி,
வணக்கம்.